வைக்கோல் விற்க ஏற்பாடு செய்யும் பொருட்டு 20 இலட்சம் ரூபாய் அளித்துள்ளது. தற்போது அதிக அளவில் பாதிக்கப்பட்ட புதுக்கோட்டை, தர்மபுரி, வடாற்காடு, இராமநாதபுரம் ஆகிய நான்கு மாவட்டங்களில் மாவட்டந்தோறும் 5 கால்நடை மருந்தகங்கள் மூலம் வைக்கோல் விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டங்களில் வைக்கோல் விற்க கூடுதலாக 20 கால்நடை உதவி மருத்துவர்களும், 40 பணியாளர்களும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

வைக்கோலைப் பெறுவதற்காக திருச்சி, தஞ்சை, மதுரை, நெல்லை ஆகிய மாவட்டங்களில் அரசுப் பண்ணைகளிலும் தனி நபர்களிடத்திலும் அதிகப்படியாக உள்ள வைக்கோலை வாங்கி, தேவைப்பட்ட இடங்களுக்கு அனுப்ப கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்களைக் கொண்ட 18 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் மத்திய அரசு உதவித் தொகை பெறப்பட்டபின் மாவட்டங்களில் மேலும் மலிவு விலையில் வைக்கோல் விற்க தகுந்த நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆகவே, இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்திர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

3. கவன ஈர்ப்புகள்.

(அ) சுழல் காற்றால் அம்பாசமுத்திரம் தொகுதி பிரமதேசத்தில் ஏற்பட்டுள்ள சேதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

(முற்பகல் 10-10)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் தொகுதியில் உள்ள பிரமதேசம் வட்டாரத்தில் 27—3—1981-ல் வீசிய சுழற்காற்றின் காரணமாக சுமார் 1 லட்சம் ரூபாய்க்கு மேல் விவசாயி

ஏற்பட்டிருப்பதால் 2 ரூபாய்தான் கொடுக்க முடியும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தனது அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே தான் பணம் கொடுக்கவேண்டிய தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரின் ரிப்போர்ட்டிலே அவ்வாறு வந்திருக்கின்றது என்று, அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அங்கே சம்பந்தப்பட்ட பாதிக்கப்பட்ட விவசாயிகளால் கொடுக்கப்பட்ட மகஜர் என்னிடத்திலே இருக்கின்றது. இதிலே ஒவ்வொருவருக்கும் எவ்வளவு எவ்வளவு ஏக்கர் பாதிக்கப்பட்டது என்ற விவரங்கள் இருக்கின்றன. 37 விவசாயிகளுக்கும் எவ்வளவு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது என்ற விவரம் தனித்தனியாக இருக்கின்றது. மொத்தமாகப் பார்த்தால் 64,509 ரூபாய் அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. அந்த விவசாயிகள் சொல்வது சரியா அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொல்வது சரியா என்பதைப் பற்றி தெரிந்துகொள்கின்ற வகையிலே அங்கே சர்வ கட்சிகளையும் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களையும் அனுப்பி அதுபற்றிய தகவலைச் சேகரித்து வருவதற்கு ஏற்பாடு செய்து அதன்பிறகு நிவாரணம் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித்தலைவர் தன்னுடைய சம்பளத்தில் இருந்தோ அல்லது தன்னுடைய மூதாதையர் சேர்த்து வைத்த சொத்திலிருந்தோ நிவாரணம் கொடுப்பதில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுக்கிறார் என்றால் அரசாங்கம் கொடுக்கிறது என்றுதான் பொருள். அப்படி இருக்கின்றபோது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நடுநிலையாக இருந்து ஆராய்ந்துதான் அது குறித்த விவரத்தை அரசுக்கு அனுப்புகிறார். அதை நாமும் ஏற்றுக்கொள்ள வேண்டி இருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சொன்ன குறிப்புகள் தவறு என்று கூறுகிறார்கள். வேண்டும் என்றால் மீண்டும் ஒரு முறை இது குறித்து ஆராய்வதற்குரிய உத்தரவினை இடுவதற்கு ஏற்பாடுகள் செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆ. கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை மற்றும் புத்தனாறு கால்வாய் ஆயக்கட்டுகள் பாதிக்கப்பெற்றுள்ளது.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, " கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை மற்றும் புத்தனாறு கால்வாய் மூலம் பயிரிட்ட நெற் பயிர் தண்ணீர் இல்லாமல் வாடி கருகுவது பற்றியும் அங்கு உடனடி நிவாரணம்